**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**

**ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல:** 04/2018

இல:20, வோட் பிளேஸ்
கொழும்பு-07
2018.06.28

பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள்
வளாக அதிபர்கள்
நிறுவகப் பணிப்பாளர்கள்

<u>உபவேந்தர் பதவிக்கான நியமனம்</u>

மேற்படி விடயம் தொடர்பிலான 2016.09.28 ஆந் திகதிய ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல 14/2016 இன் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. உப வேந்தர் பதவிக்கான நியமனத்தினைக் குறிக்கோளாகக் கொண்டு மூன்று பேரைக் கொண்ட ஒரு குழுவை பரிந்துரை செய்வது தொடர்பில் ஏலவே பின்பற்றப்பட்டு வருகின்ற வழிமுறைகளில் மேலும் திருத்தங்களை மேற்கொள்வதற்கு 2018.05.10 ஆந் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 986 ஆவது கூட்டத்தொடரின் போது கருத்திற் கொள்ளப்பட்டது.

3. அதனடிப்படையில், பின்வரும் திருத்தப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றும்படி பல்கலைக்கழகங்களிடம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

I. பல்கலைக்கழகப் பதிவாளர் (கவுன்சில் செயலாளர்) அவர்களினால் பத்திரிகைகளுக்கு வழங்கப்படும் அறிவித்தல் மூலம் மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் / பெயர் முன்மொழிவுகள் கோரப்படும். விண்ணப்பதாரிகள் / அவ்வாறு பெயர் முன்மொழிவு கோருபவர்கள் இலங்கைப் பிரஜையாயிருத்தல் அவசியம்.சேவையாற்றிக் கொண்டிருக்கும் தற்போதைய உபவேந்தர் பதவிக்காலம் முடிவுறுவதற்கு இருக்கின்ற 6 மாத காலத்திற்கு முன்னரான ஒரு மாத காலப்பிரிவினுள் பதிவாளர் மூலம் பதவி வெற்றிடத்தினை அறிவித்து அறிவித்தல் ஒன்று பிரசுரிக்கப்படும்.

II. இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான கீர்த்தி பொருந்திய நபர்களைத் தேடுவதற்கு மற்றும் அவர்களை உற்சாகப்படுத்துவதற்கு, பேராசிரியர் பதவியில் அல்லது அதற்கு மேலான பதவியொன்றை வகிக்கின்ற சிரேஷ்ட கல்வியியலாளர்கள் 3 பேரை உள்ளடக்கிய பொருத்தமான தேடல் சபையொன்று நியமிக்கப்படல் வேண்டும். இத் தேடல் சபையின் அங்கத்தவர்களில் ஒருவர் குறைந்தபட்சம் பல்கலைக்கழகப் பீடாதிபதியாக இருக்க வேண்டுமென்பதுடன் அந் நபர் கவுன்சிலின் தலைவராகவும் இருத்தல் வேண்டும்.

III. பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் தான் அடைய எதிர்பார்க்கும் இலக்குகள் மற்றும் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்கான தொலைநோக்குக் கூற்று என்பவற்றை , விண்ணப்பதாரியின் பிறந்த திகதி உள்ளடங்கலாக பூரணமான சுயவிபரக்

கோவையொன்றை விண்ணப்பதாரி / பெயர் முன்மொழிபவரால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

IV. தற்போது சேவையாற்றி வருகின்ற உபவேந்தர் அவர்கள் மீண்டும் விண்ணப்பதாரியாக விண்ணப்பிக்கும் பட்சத்தில், மேலே III இல் கூறப்பட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக அவரின் முதலாவது உத்தியோகபூர்வ காலப்பிரிவின் போது அவரால் ஆற்றப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கையொன்றைப் பெற்றுக் கொடுக்கவும் வேண்டும்.

V. தலைவர் உட்பட கவுன்சில் உறுப்பினர்கள் மூன்று பேர்கள் அடங்கிய மதிப்பீட்டுக் குழுவொன்று கவுன்சிலினால் நியமிக்கப்படல் வேண்டும். மதிப்பாய்வுக் குழுவின் எந்தவொரு அங்கத்தவரும் உபவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்த அல்லது பெயர் முன்மொழியப்பட்ட நபராக இருத்தல் கூடாது. ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் தகைமைகள், தொழில் அனுபவம் மற்றும் தூரநோக்கு தொடர்பான அறிக்கை என்பவை தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கவுன்சில் முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

VI. அடுத்த உபவேந்தர் தெரிவுக்கான தேர்தல் இடம்பெறுவதற்கு 07 நாட்களுக்கு முன்னர், மேலே பந்தி இல III மற்றும் / அல்லது IV மற்றும் V இன் படி விண்ணப்பதாரிகள் மூலம் முன்வைக்கப்படும் சகல ஆவணங்களினதும் பிரதிகளுடன் அடுத்த உபவேந்தரை தெரிவு செய்வதற்காக வேண்டிய விஷேட சபைக் கூட்டமொன்றை நடத்துவது தொடர்பிலான அறிவித்தலை, சகல கவுன்சில் உறுப்பினர்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் கண்காணிப்பாளர் அவர்களின் முறையான கண்காணிப்புக்குட்படுத்தப்பட்டது என்பது தொடர்பில் கவுன்சில் செயலாளர் அவர்களினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

எவ்வாறிருப்பினும், கவுன்சில் உறுப்பினர் ஒருவர் அபேட்சகராக இருப்பின்,ஏனைய அபேட்சகர்களினால் முன்வைக்கப்படும் ஆவணங்கள் / சுய விபரக்கோவை என்பன அத்தகைய விண்ணப்பதாரிகளுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட மாட்டாது என்பதைக் கவுன்சில் தலைவர் உறுதி செய்தல் வேண்டும்.

VII. தெரிவு இடம்பெறுவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கண்காணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கான கோரிக்கையொன்று, கவுன்சில் செயலாளரினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்படல் வேண்டும்.

VIII. உபவேந்தர் பதவிக்குத் தகுதியான விண்ணப்பதாரிகள் சகலருக்கும் உபவேந்தர் தெரிவு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், கவுன்சில் முன் 15 நிமிடங்களுக்கு மேற்படாத 10 நிமிடங்களுக்குக் குறையாத காலப்பிரிவினுள் சிறிய முன்வைப்பு ஒன்றை மேற்கொள்வதற்காக அழைக்கப்படுவர். எவ்வாறிருப்பினும் எந்தவொரு அபேட்சகருக்கும் அவ் அபேட்சகர் கவுன்சில் உறுப்பினராக இருக்கும் பட்சத்தில் கூட வேறொரு அபேட்சகரின் முன்வைப்புக்குக் கலந்து கொள்ள இயலாது. தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரம், அதாவது எந்தவொரு விண்ணப்பதாரிகளுக்கும் / பெயர் முன்மொழியப்பட்டவர்களுக்கும் விஷேட கவுன்சில் கூட்டத்தொடருக்கு தமது முன்வைப்பினைச் செய்ய முடியாவிடின், அவர்களுக்கு "Skype"- (ஸ்கைப்) போன்ற காணொளி மாநாட்டின் வாயிலாக தமது முன்வைப்பினை வழங்குவதற்காக வாய்ப்பளிக்கப்படும்.

IX. கவுன்சில் ஆனது அபேட்சகர்கள் மூன்று பேரின் பெயரை வழங்க வேண்டுமென்பதுடன், சகல தகைமைகளையும் கொண்ட விண்ணப்பதாரிகளின் பெயர் அடங்கிய தேர்தல் அறிக்கையொன்றை தயாரிக்க வேண்டுமென்பதுடன் இரகசியத் தேர்தல் வாயிலாக கவுன்சில் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும். கவுன்சில் ஒருப்பினர் ஒருவர் அபேட்சகராக இருப்பின் அவர் வாக்குக் கணக்கெடுப்பிற்கு தகுதி பெற மாட்டார். வாக்குக் கணக்கெடுப்பின் போது, சகல கவுன்சில் உறுப்பினர்களும் அச் சந்தர்ப்பத்திற்கு தாம் சமுகமளிப்பது கட்டாயமாக்கப்பட்டிருப்பதுடன் பல்கலைக்கழக உபவேந்தரை தெரிவு செய்து நியமிப்பது தொடர்பில் எந்தவொரு தகவல்களையும் வெளிப்படுத்துவதிலிருந்து தவிர்ந்திருப்பதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

X. வாக்குக் கணக்கெடுப்பின் போது, அபேட்சகர்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினர் சமமான வாக்குகளைப் பெறின் முதலாவது , இரண்டாவது, மூன்றாவது இடங்களுக்குத் தேவையான மற்றுமொரு தேர்தல் வாக்கெடுப்புச் சுற்றொன்றை நடாத்துவதற்கு கவுன்சிலுக்கு உரிமை உண்டு.பிற்பாடு நடாத்தப்படும் தேர்தல் ஆனது சமமான வாக்கு எண்ணிக்கையினைப் பெற்றுள்ள அபேட்சகர் மத்தியில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் ஆரம்பத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட உடனே இது நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். சகல அடுத்த தேர்தல் வாக்குக் கணக்கெடுப்பின் போதும், கவுன்சிலின் சகல உறுப்பினர்களுக்கும் ஒவ்வொரு வாக்குகளை அளிப்பதற்கான அனுமதியானது வழங்கப்படும்.

XI. மேலே பந்தி இல III / அல்லது IV இல் குறிப்பிடப்பட்டிருக்கும் கடித ஆவணங்களுடன் கூடுதலான வாக்குகளைப் பெற்றுக் கொண்ட அபேட்சகர்கள் 03 பேரின் பெயர்கள் ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்படல் வேண்டும்.

XII. அறிவித்தல் பிரசுரிப்பின் மூலம் விண்ணப்பங்கள் மூன்றினை அடையாளங் காண்பதற்கு கடினமாகும் பட்சத்தில் மிகவும் விரிவானதொரு அமைப்பில் அறிவித்தலொன்றைப் பிரசுரித்து இச் செயன்முறையினை மீண்டும் ஆரம்பித்தல் வேண்டும்.பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு முன்வைப்பதற்கு மூன்று நபர்களை இனங்காணும் வரை மீண்டும் மீண்டும் இடம்பெறல் வேண்டும்.

04. 2018.08.01 முதல் இச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் யாவும் நடைமுறைக்கு வருவதோடு அத் தினம் முதல் 2016.09.28 ஆந் திகதிய ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல 14/2016 இன் பிரகாரம் இது வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் எந்தவித பாரபட்சமுன்றி மேற்படி சுற்றறிக்கையானது 2018.08.01 முதல் இரத்துச் செய்யப்படும்.

05. தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

பேராசிரியர். மொஹான் த சில்வா

தலைவர்

பிரதிகள்:

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
2. தலைவர் அலுவலகம், ப.மா.ஆ
3. உப தலைவர், ப.மா.ஆ
4. ப.மா.ஆ உறுப்பினர்கள்
5. செயலாளர், ப.மா.ஆ
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், ப.மா.ஆ
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள்
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள்- உயர்கல்வி நிறுவகம் / நிறுவகங்கள்
11. பிரதிப்பதிவாளர்கள், சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள், உதவிப் பதிவாளர்கள்-உயர்கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளர்கள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள், உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர்கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்- ப.மா.ஆ
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்கக் கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர்கல்வி நிறுவகங்களின் பிரதி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்
16. சகல தொழிற்சங்கங்களினதும் செயலாளர்கள்
17. கணக்காய்வாளர் நாயகம்

கோப்பு இல: ப.மா.ஆ / எச்.ஆர்/2/3/238